தனிச்சுற்றுக்கு மட்டும்
பதிப்பு 05 | ஜூலை - செப்டம்பர் 2020

# FINANCIAL Insights

Powered by CRK Financial Solutions



# அன்பு நண்பர்களே வணக்கம்!



வணக்கம். இந்த இதழின் வாயிலாக உங்களுடன் உரையாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. உங்கள் நல்வாழ்விலும், பாதுகாப்பிலும், உடல் நலனிலும், *CRK Financial Solutions* அக்கறையும் மதிப்பும் கொண்டிருக்கிறது.

கொரோனா நோய் தொற்று பரவலின் காரணமாக நாம் எல்லோரும் ஊரடங்கினை அனுசரித்து, இல்லத்தை விட்டு வெளியே வராமல் அமைதி காக்கும் இந்தத் தருணத்தில் உங்களுக்கான புதிய முதலீட்டுத் தேவை, நடைமுறையில் இருக்கும் முதலீடுகள், காப்பீடு பாலிசிகளைப் புதுப்பித்தல், அவற்றுக்குத் தேவையான சட்ட பூர்வமான சில படிவங்களைச் சமர்ப்பிக்கும் பணிகளுக்குத் தேவையான உதவிகளை எங்கள் *CRK Financial Solutions* பணியாளர்கள் தங்களுக்குத் தொலைபேசி வழியாகவும் இணைய தளங்களின் வழியாகவும் ஆவண செய்து உதவிக் கொண்டிருக்கின்றனர். அப்படியான சேவை தொடர்பான தங்களின் மேலான கருத்துகள், ஆக்க பூர்வமான விமர்சனங்கள், இந்த சேவையினை மேம்படுத்த தேவையாக கருத்துகளை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக சூழலில், இதுவரை நாம் சந்தித்து அனுபவப்படாத அளவில் இந்த நோய்த் தொற்று பரவி ஊரடங்கு, நாடெங்கும் ஏன் உலகமெங்கும் நிலவி நமது அன்றாட அலுவல்களை, கடமைகளை சிதைத்து விட்டது. ஆனாலும் இந்த சூழல் நமக்கு பெரும் படிப்பினை வழங்கியிருக்கிறது என்பதை நாம்3 நினைத்துப் பார்க்கலாம், எப்படி எனில்

- உடல் ஆரோக்கியம், தனி மனிதரின் சுத்தமான தினசரி வாழ்க்கை எத்தனை முக்கியமானது என்பது பரவலாகப் புரியத் தொடங்கியிருக்கிறது.
- சமூக அளவில் நாம் ஒன்று கூடும் தருணங்களை நாம் எப்படி மறு சிந்தனைக்கு உட்படுத்த வேண்டும் என்பதை நாம் யோசிக்க வேண்டும்.
- பண பரிவர்த்தனைகள், பொருட்கள் வாங்குதல் இவற்றினை நாம் மின் வர்த்தகம் அல்லது டிஜிட்டல் வழியாகச் செய்து கொள்ள வேண்டிய அவசியத்தினை காலம் வலியுறுத்தியிருக்கிறது.
- கல்வி, திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வகுப்புகள் இனி வரும் காலங்களில் இணையத் தளங்கள் வழியாக, மொபைல் செயலிகள் வழியாக நடக்கவிருக்கின்றன. இது ஒரு பெரிய வரமாகக் கருதப்பட வேண்டும்.
- நமக்கும், நம் குடும்பத்தாருக்கும் ஆயுள் காப்பீடு, மருத்துவக் காப்பீடுகள் எத்தனை அவசியமானவை என்பதை நான் உணர வேண்டிய மிக முக்கியமான தருணம்.
- எதிர்பாராத சமூக சவால்கள், ஆபத்து காலங்கள், இது போன்ற ஊரடங்கு காலத்தில் நம் வருமானங்கள் பாதிக்கப்பட்டு இருக்கும் போது, நம் தேவைகளை நிறைவு செய்து கொள்ள நமக்கான ஆபத்து கால நிதி என்பது அவசியம். அதனை மாதா மாதம் சேமிக்க வேண்டும். அது நமக்கு ஆபத்து காலத்தில் எடுத்து கையாளும் வகையிலும் அதே சமயம் நீண்ட கால சேமிப்பாகத் தொடரும் படி அமையவும் வேண்டிய அவசியத்தினை நமக்கு உணர்த்தியிருக்கிறது.

மாணவர்கள், வேலைக்குச் செல்கின்றவர்கள், தொழில் முனைவோர் அனைவரும் தங்கள் கடமைகளைக் காலத்தே செய்து கொள்ள முடியாமல் பல பாதிப்புகளைச் சந்தித்திருக்கிறோம். ஆனாலும் நம் அயராத முயற்சியால், தளராத முறையான சிந்தனையால் இதனைக் கடந்து வருவோம்.

C.Ravikumar

CEO., CRK Financial Solutions

**திருக்குறள் 461**

**அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமும் சூழ்ந்து செயல்.**

விளக்கம் :
ஒரு செயலைச் செய்யும்போது வரும் நட்டத்தையும், பின் விளைவையும் பார்த்து, அதற்குப்பின் வரும் லாபத்தையும் கணக்கிட்டுச் செய்க.

**We're Social**

+91 99416 06398

username
CRK Financial Solutions




**நான் மத்திய அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறவிருக்கிறேன். எனக்கு கிடைக்கும் பணி ஓய்வு பலனான தொகையினை எப்படிப் பிரித்து முதலீடு செய்வது?**

திரு. பாலாஜி - மேற்கு மாம்பலம்

வணக்கம் சார். ஒரே மாதிரி முதலீடுகள் செய்யாமல் பிரித்து செய்வது என்பதே சிறந்த முதலீடு. அஞ்சலக முதலீடுகள், ஆயுள் காப்பீடு, *Debt Funds*, தங்கம், நீண்ட கால வைப்புத் திட்டங்கள் இப்படி பிரித்து செய்ய வேண்டும். அரசு பணியில் இருக்கும் போது மருத்துவ செலவுகளை பணிக் காலத்து மருத்துவக் காப்பீடு மூலம் செய்து கொண்டிருந்திருப்பீர்கள். அதே அளவுக்கு தனியே எடுத்து வைத்துக் கொள்வது பாது காப்பானது.

**ஹலோ ரவி, எனக்கு 3 மாதங்களான பெண் குழந்தை உள்ளது. ஆயுள் காப்பீடு திட்டங்களில் முதலீடு செய்வது நல்லதா. ஆலோசனை சொல்லவும்.**

திரு. சுப்ரமண்யம் - நங்கநல்லூர்

வாழ்த்துக்கள்! ஆயுள் காப்பீடு என்பது நாம் குறைந்த வயதில் இருக்கும் போதே தொடங்குவது மிகச் சிறந்த முதலீடு. வயது குறைவாக இருக்கும் போது ப்ரீமியம் தொகை குறைவாக இருக்கும். ஆயுள் காப்பீடு நீண்ட கால முதலீடு. பெண் குழந்தைகளுக்காக "ஜீவன் லக்ஷயா" எனும் திட்டம் நல்ல திட்டம். அதில் முதலீடு செய்யுங்கள். அதே போல மாத மாதம் சேமிக்கும் படி ம்யூச்சுவல் நிதி முதலீடுகளில் அதாவது பங்குச் சந்தை முதலீட்டில் முதலீடு செய்யுங்கள்.

**ரவி, நான் தொழில் செய்கிறேன். மாதம் 50 ஆயிரம் வருமானம் வருகிறது. மனைவி, எட்டு வயது குழந்தை எனும் மகிழ்ச்சியான குடும்பம் எனது. எனக்கான ஆயுள் காப்பீடு முதலீடுகள் செய்வதில் உங்கள் ஆலோசனை என்ன?**

திரு. முரளி, மயிலாப்பூர்

நீங்கள் தான் உங்கள் குடும்பத்துக்கு வருமானம் ஈட்டும் நபர் என்பதால் ஆயுள் காப்பீடு மிகவும் அவசியமானது. அதே போல உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் சேர்த்து மருத்துவக் காப்பீடு திட்டம் அவசியம் வேண்டும். சுமார் 5 லட்சம் அளவில் காப்பீடு கொண்ட நல்ல திட்டங்களை நீங்கள் அவசியம் வைத்திருக்க வேண்டும். இது உங்கள் சேமிப்பினை மருத்துவ செலவுகளுக்காக இழப்பதைத் தவிர்க்க உதவும்.

நீண்ட கால சேமிப்பாக ஆயுள் காப்பீடு மற்றும் பங்குச் சந்தையில் மாதாந்திர முதலீடு என்பன உங்களுக்கான பாதுகாப்பான முதலீடுகள். பொதுவில் மாதம் 10 ஆயிரம் ரூபாய் சேமிப்பது உங்களுக்குப் பாதுகாப்பானது. ஆபத்து கால சேமிப்பாக குறைந்த பட்சம் 3 லட்சம் ரூபாய் அதாவது உங்கள் ஆறு மாத வருமானத்தினை வைத்திருக்க வேண்டும். இதற்கு அஞ்சலகம் அல்லது வங்கியின் மாதாந்திர சேமிப்புத் திட்டம் அல்லது மாதாந்திர சேமிப்பு மூலம் *Liquid Funds*களில் முதலீடு செய்வது நன்மையானது. உங்கள் ஓய்வு கால சேமிப்புக்கும் முதலீடு செய்ய வேண்டும்.

**சேமிப்பு/ முதலீடு/ நிதி மேலாண்மை தொடர்பான உங்கள் சந்தேகங்கள், கேள்விகளுக்கு நாங்கள் பதில் அளிப்போம். இதற்கான தனி பகுதி நமது இதழில் இடம் பெறுகிறது.**

**உங்கள் கேள்விகளை அனுப்ப தொடர்பு கொள்ளவும்.**

***Email: radhukanna@gmail.com***

***Whatsapp : 9941606398***

## Benefits of Health Insurance




- Financial Stability
- No Treatment Compromise
- Cashless Treatment
- Routine Medical Check-up
- Tax Benefit
- COVID cover
- No claim bonus

*Do you know?* EPS – Earnings Per Share

# காலத்தே புறப்பட்டு நேரத்தே அடைவது

*"Regularity is the key to wealth, not ROI"!*



**Mr.R.Gopinath., CEO**
*Gopast Centre for learning Pvt Ltd*

இதற்கு முந்தைய இதழ்களில் சேமிப்பு நிதி மேலாண்மை குறித்த மிக முக்கியமான மூன்று கொள்கைகளை அல்லது விதிகளை கவனித்தோம் அதன் தொடர்ச்சியாக நான்காவது விதியை இப்போது கவனிப்போம்.

**"பேராசையும் தங்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்லாது என்பது விதி"**

அதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கதைகள் மூலமும் சிலரின் வாழ்க்கை உதாரணங்கள் மூலமும் இந்த விதி குறித்து நமக்கு படிப்பினைகள் இருக்கின்றன.

ஏழ்மை நிலையில் இருந்து திடீரென செல்வம் வந்தவர்கள் அதனை சரியாக நிர்வாகம் செய்யாமல் பேராசை கொண்டு தவறாக முதலீடு செய்து கிடைத்த லாபத்தையும் சொத்தையும் இறந்து இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

நமக்கு எல்லோருக்கும் தெரிந்த ஒரு கதை; மன்னன் ஒருவன் தேவதையிடம் வரம் கேட்கிறான். என்னவென்று? தான் தொட்டது எல்லாம் தங்கமாக வேண்டும் என்று அந்த தேவதையும் சிரித்துக்கொண்டே அப்படியே ஆகட்டும் என்று வரம் கொடுத்துவிட்டு போனது.

பேராசை கொண்ட அந்த மன்னன் என்ன செய்தான். தனது அரண்மணையில் ஒவ்வொரு பொருளாகத் தொட்டுக் கொண்டு வந்தான். ஒரு நாற்காலியைத் தொட்டான். தங்கமானது அந்த நாற்காலி. ஒரு கட்டிலைத் தொட்டான். தங்கமானது அந்த நாற்காலி. ஆசை எல்லை கடந்தது. விரைந்து அரண்மனையில் சமையல் அறைக்குச் சென்று அங்கிருக்கும் பாத்திரங்களை எல்லாம் தொட்டான். எல்லாம் தங்கமானது. அவனுக்கு ஏக சந்தோஷம். அவன் என்ன செய்கிறான் என்பதைப் பார்க்க அவனது மகள் அங்கே வந்தாள். அன்புடன் தான் அவளைத் தொட்டான். தேவதை கொடுத்த வரம் வேலை செய்தது. மகளும் தங்கமானாள். தங்கச் சிலையானாள்.

இது போலத்தான் இன்னொருவனுக்கும். அவனுக்கு கிடைத்த வரம் வேறு. அவனிடம் ஒரு வாத்து இருந்தது. தேவதையின் அருளால் அந்த வாத்து தினம் ஒரு தங்க முட்டை ஈன்றது. முதலில் சில நாட்களுக்கு. அவனுக்கு ஆர்வம் இருந்தது. தினம் தங்கம் முட்டை. ஒவ்வொரு நாளும் முட்டைகளைக் கைகளில் எடுத்துப் பார்த்து பரவசமானான். பரவசம் அளவு கடந்தது. ஆசை வளர்ந்தது பேராசை ஆனது. தினம் தங்க முட்டை போடும் வாத்து தன் வயிற்றில் வைத்திருக்கும் தங்கத்தை எல்லாம் எடுக்க வேண்டும் என ஆசைப்பட்டு வாத்தின் வயிற்றைக் கிழித்துப் பார்த்தான். பரிதாபம் வாத்து இறந்து போனது தான் மிச்சம்.

பேராசைக்கு என சில குணங்கள் உண்டு. பேராசை அறிவை மழுங்கச் செய்யும். இயற்கை மனிதனுக்கு சில எச்சரிக்கை செய்தி தரும். பேராசை அந்தச் செய்திகளை மறைத்துவிடும். உண்மையான சவால்களை பேராசை நிராகரிக்கும். ஆபத்துகளை கண்ணில் மறைக்கும். நிதி/பொருளாதாரச் சந்தை பேராசை மனிதர்களை கடுமையாகத் தண்டிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

டேனியல் கால்ஹ்மென் எனும் உளவியல் அறிஞர், நாம் நிதியைக் கையாள்வதில் நமது முடிவுகளை எப்படி எடுக்கின்றோம் குறித்து தரமான நூல்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். நிதிச் சந்தையின் தன்மைகளைக் குறித்து எழுதும் போது ஓரிடத்தில் சிறப்பாக அவர் குறிப்பிடுகிறார். இங்கே பொதுத் தன்மையினை விட சிறப்பான அணுகுமுறையே நல்லது என. அதை அவர் சொல்லும் விதம் தனித்துவமானது. பிரத்தியேகம் என்பதை இங்கு தனியே பிரிக்க முடியாது என்பது அவர் கருத்து.

நிதி மேலாண்மை என்பது அடிப்படை விதிகளை சரிவரக் கடைபிடிப்பதனால் தான் சிறக்கிறது என்பது நிபுணர்கள் கருத்து. திடீரென உயரும் லாபமோ அதனால் வரும் ஆதாயமோ ஒருவரை நிலை தடுமாற வைப்பது என்பது கட்டுப்பாடு இல்லாது ஓடும் காளை போன்றது என்பார்கள். மின்னி மறையும் தற்காலிக லாபங்களால் பேராசை கொண்டால் நஷ்டம் என்பது நிரந்தரமாகிவிடும். ஓர் உதாரணத்தை கவனிக்கலாம்.

அதுல் என்பவர் மாதாந்திரச் சேமிப்புகள் மூலம் பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் திட்டத்தில், 20 வருடங்களில் 20 லட்சம் நிதிச் சேமிப்பு அடைய வேண்டும் எனும் இலக்கு கொண்டு தொடங்குகிறார். அவர் அந்த இலக்கினை 15 வருடங்களில் அடைந்துவிட்டார் என்றால்

அவருக்கு இன்னமும் மீதம் 5 வருடங்கள் இருக்கின்றன.

இப்போது அதுல் செய்ய வேண்டியது என்னவென்றால். சிறிதளவு முதலீட்டை மட்டும் அந்த சேமிப்பு நிதியில் இருப்பு வைத்துவிட்டு, பெரும் பகுதியை வேறு நல்ல ஸ்திரமான பாதுகாப்பான நிதித் திட்டத்தில் மாற்றி முதலீடு செய்ய வேண்டும். ஆனால் இப்படி தீர்க்கமாக யோசிக்க திடமான சிந்தனை வேண்டும். பேராசை கொள்ளாத மனம் வேண்டும். நாம் முதலீடு செய்த நோக்கம் நிறைவேறியது. நமது பணம் இனி பத்திரமாக இருக்க வேண்டும் எனும் சிந்தனைத் தெளிவு வேண்டும். ஆனால் அதுல் இந்த எண்ணத்தைப் புறக்கணித்து மீதம் இருக்கும் ஐந்து வருஷங்களும் அதே திட்டத்தில் தனது சேமிப்பை நீடித்தார். நிதிச் சந்தையின் பல அம்சங்களால் அவரால் 20 வது வருட முடிவில் 10 லட்சங்கள் தான் ஈட்ட முடிந்தது.

நிதி சந்தையில் எங்கே நிறுத்த வேண்டும். எங்கே திசையினை மாற்றிக் கொண்டு பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் எனும் தீர்க்கமான சிந்தனையும் அதனைச் செயல்படுத்தும் திண்மையான எண்ணமும் அவசியம். அது இல்லாமல் கிடைக்கும் லாபம் மேலும் மேலும் அதிகமாகக் கிடைக்கும் எனும் பேராசைக்கு இடம் அளித்தால் நஷ்டம் தான் முடிவாக இருக்கும்.

இது போன்ற ஆசை காட்டும் நிலைமைகளைச் சமாளிக்க முறையான எண்ணங்கள் அவசியம். அதுவே சவால்களை எதிர்கொள்ள சரியான வழி . ஆபத்துகளை, சவால்களை சரியாக அடையாளம் காணத் தெரியவேண்டும். அப்படி அடையாளம் காண பேராசை கொள்ளும் மனம் இடம் கொடுக்காது. சில நேரங்களில் நிதிச் சந்தை தற்காலிகமாக சில உயர்வுளை சில லாபங்க்ளைக் காணும். அப்போது முதலீட்டாளர்கள் நிதானமாக இருக்க வேண்டும். அந்த தற்காலிக நிலைமையினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பேராசை கொண்டால் அதற்கு ஏற்ப முதலீடுகளைக் கையாண்டால் நஷ்டம் தான் வரும். லாபம் வராது.

நிதி முதலீடு என்பது சூதாட்டம் அல்ல. நிதி முதலீடு என்பது பந்தயத்தில் விரைவாக வண்டி ஓட்டுவது போன்ற போட்டிக் களம் இல்லை. அது நிதானத்துடன், மதி நுட்பத்துடன் சூழ்நிலையினை அனுசரித்து முதலீடு செய்து லாபம் காண வேண்டிய களம். நிதிச் சந்தையின் தன்மை காரணமாக நஷ்டம் வருவதில்லை. நிதிச் சந்தையினைத் தவறாகப் புரிந்து கொள்வதன் மூலமே நஷ்டம் வருகிறது.


> திருக்குறள் - தெரிந்துசெயல்வகை
>
> **எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு**
> **கொள்ளாத கொள்ளாது உலகு.**
>
> விளக்கம் :
> தம் நிலையோடு பொருந்தாதவற்றை உலகம் ஏற்றுக்கொள்ளாது, ஆகையால் உலகம் இகழ்ந்து தள்ளாத செயல்களை ஆராய்ந்து செய்ய வேண்டும்.


**7.15% PA FLOATING RATE SAVINGS BONDS 2020**

- GOI Bond
- Safe and Secure
- Floating Rate of Return
- 7 years Tenure
- Half yearly Interest Payout

**LAUNCH DATE - 1ST JULY 2020**





01
என்ன செல்வம், ரொம்ப பிசியா போனில் பேச பல முறை ட்ரை செய்தேன். பிடிக்கவே முடியலை. எப்படி இருக்கிறாய். உங்க வீட்டு பக்கத்திலே கோவிட் பாதிப்பு எல்லாம் எப்படி இருக்கு. உங்க வீட்டுக்குத் தேவையான எல்லாம் சரியா கிடைத்ததா?
ஹலோ அறிவு. தப்பா எடுத்துக்காதே. நானே உன்னிடம் பேசணும்னு இருந்தேன். இப்படி ஒரு சிக்கல் வந்திருக்கு. இப்ப திடீர்னு சிலருக்கு வேலை போயிடுது, வெளியில் போய் சம்பாதிக்க முடியலை. இதை எப்படி சமாளிக்கிறது.
02
நல்ல கேள்வி செல்வம். எறும்புகள் வெயில் காலத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் புற்றுக்குள் உணவு சேமித்து வைத்து அதை குளிர் காலத்தில் பயன்படுத்தும் அது போல நாமும் செய்ய வேண்டியது தான்.
ஓ! நல்ல தகவல் அறிவு. இதை எப்படித் திட்டமிடனும். உன்னிடம் கேட்டால் நல்ல டிப்ஸ் கிடைக்கும் என்று கேட்கிறேன்.
03
ஒவ்வொருத்தர் *lifestyle*-க்கும் தகுந்த மாதிரி திட்டமிட்டு, அவசர காலத்துக்குப் பயன் தருவது போல ஒரு சேமிப்பு இருக்கணும். அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மாதம் தவறாமல் சேமிக்கணும்.
எவ்வளவு சேமிக்கணும் அறிவு. எதுவும் ஃபார்முலா மாதிரி இருக்கா.
04
எல்லோருக்கும் பொதுவாக செலவுகள் ஒரே மாதிரி தான் இருக்கும் ஆனால் அளவு வேற வேற மாதிரி இருக்கும். உதாரணமாக ஒருத்தருக்கு வாடகை இருக்கிற மாதிரி இன்னொருத்தருக்கு இருக்காது. இதையெல்லாம் வைத்துப் பார்த்தால் மாதத்தின் செலவுகளைப் போல 3 பங்கிலிருந்து 6 பங்கு வரை சேமிப்பு தயாராக இருக்கணும்.
3 பங்கு என்பது அளவு குறைவு ஆனால் தாக்குப் பிடிக்கலாம். 6 பங்கு என்பது மிகவும் பலமான அவசர கால சேமிப்பு. சில காலம் தாக்குப் பிடிக்கும்.
05
இதை எப்படி சேமிப்பது அறிவு. *Recurring deposit* மாதிரியா.
செல்வம்
ப்ளான் பண்ணி
அறிவு
செய்யணும்
தொடர் - 05
06
போஸ்ட் ஆபிஸில் அல்லது வங்கிகளில் *Recurring deposit* மூலம் சேமிப்பது நீண்ட கால சேமிப்பு. ஆனால் அது மாதிரி திட்டங்களில் இடையே பணம் எடுக்க முடியாது. இல்லையெனில் பணம் அப்படி எடுப்பது ரொம்ப சிரமம். ஆனால் இதுவே *SIP* அதாவது *Systematic Mutual Fund*-ல் சேமித்தால், அந்த சேமிப்பு வளரும். எப்ப வேண்டுமோ அதிலிருந்து பணம் எடுத்துக்கலாம். இப்படி நடுவிலே கொஞ்சம் *amount withdraw* செய்வதால் திட்டம் ஒன்றும் கெட்டுப் போகாது. மாதா மாதம் நாம் சேமிக்கும் ஒரு சிறு சேமிப்பு தொடர்ந்து கொண்டே இருக்கும். இது தான் நான் சொன்ன எறும்பு சேமிப்பது போல, ஒரு குளிர் காலத்துக்கு சேமித்த உணவு முழுவதும் தீர்ந்து விடவில்லை என்றாலும் எறும்பு சேமித்துக் கொண்டே இருக்கும். உனக்கு இப்படி சேமிக்க வேண்டும் என்றால் *CRK Financial Solutions* போன் பண்ணி பேசு. ஏற்பாடு செய்து தருவார்கள்.
07
புரியுது அறிவு. இந்த கோவிட் 19 வந்ததில் பல கஷ்டம். ஆனால் நம்ம கஷ்டத்துக்கு தீர்வு நம்ம தான் யோசிச்சு தீர்த்துக்கணும்னு ஒரு புரிதலும் வந்திருக்கு. ரொம்ப நன்றி.

# Financial Trends

| HIGHEST INTEREST RATES ON FIXED DEPOSITS SCHEMES | | |
|---|---|---|
| FD Name | Rating | Interest Rate * (Up to) |
| Shriram Unnati Deposits | MAA+ by ICRA, FAA+ by CRISIL | 8.56% |
| PNB Housing Ltd | CRISIL FAAA | 7.90% |
| Mahindra & Mahindra Financial Services Ltd | CRISIL FAAA | 7.85% |
| Bajaj Finance Ltd | FAAA by CRISIL, MAAA by ICRA | 7.75% |
| ICICI Home Finance | FAAA by CRISIL, MAAA by ICRA | 7.50% |
| Sundaram BNP Paribas Home Finance Ltd. | ICRA MAA+ | 7.25% |
| HDFC Ltd. | FAAA by CRISIL, MAAA by ICRA | 7.03% |

* Highest rate including additional interest for Senior citizens, employees etc. wherever applicable.

* As of June 2020

# சேமிக்க ஐந்து சிறந்த வழிகள்

**காலச் சூழலில் இயற்கைப் பேரிடர் காலங்களில் சில கட்டுப்பாடுகளும் சிக்கனமும் அவசியமானவை ஆனால் இந்த செலவினங்களில் அப்படி ஒரு கட்டுப்பாடு அனுசரிக்க வேண்டாம்.**

## ஆயுள் காப்பீடு

ஆயுள் காப்பீடு என்பது நீண்டகால சேமிப்பு மட்டுமல்ல. இறப்புக்கு பின்னும் குடும்பத்தாருக்கு ஓரளவு பாதுகாப்புத் தரக்கூடியதால் ஆயுள் காப்பீடு ப்ரீமியம் என்பது தொடர்ச்சியாகக் கட்டப்படும் போது மட்டும் தான் அதற்கான பலனைத் தருகின்றது. வேலை இழப்பு, வருவாய் இழப்பு என இடரான சூழலிலும் ப்ரீமியம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

## பேரம் வேண்டாமே

நமக்கு காய்கள் கனிகள் கொண்டு வந்து தருகின்றவர்கள் மிக முக்கியமானவர்கள். அவர்களுக்கு கிடைக்கும் வருவாயும் அதனால் சேமிப்பும் மிகக் குறைந்த அளவில் இருக்கும். பேரிடர் காலத்தில் இவர்களுக்கு வருமானம் மிகக் குறைந்த அளவில் இருக்கும். வியாபாரமும் பாதியாகக் குறைந்துவிடும். ஆதலால் வாடிக்கையாளர்களிடம் விலை சற்று அதிகம் வைத்து விற்கக் கூடும். இந்த சிறிய விஷயத்தை பெரிது படுத்தாமல் அவர்களை ஆதரிக்க வேண்டும்

## நமது பணியாளர்கள்

நமக்காக வீட்டு வேலை, தோட்ட வேலை செய்பவர்கள், வாகன ஓட்டிகள் போன்றோர் குறைந்த ஊதியத்திற்கு பணி செய்கின்றவர்கள். இவர்களுக்கு தினசரி/மாத வருமானம் என்பது மிக முக்கியம். பேரிடர் காலங்களில் இவர்களை பணி இழக்கச் செய்வதோ அல்லது கூலி/சம்பளம் தராது இருப்பதோ நல்ல செயல் அல்ல.

## மருத்துவக் காப்பீடு

அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு என்பது அவசியமானது. அலுவலகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு அந்தந்த நிறுவனங்கள் குழு மருத்துவக் காப்பீடு பாதுகாப்பு வழங்குகிறது. இதனைக் காரணமாக வைத்துக் கொண்டு சிலர் மருத்துவக் காப்பீடு செய்து கொள்வதில்லை. அலுவலத்தில் வழங்கப்படும் மருத்துவக் காப்பீடு நன்மை தான். ஆனால் அது போதுமானதாக இருக்காது. மேலும் சில சிகிச்சைகளுக்கு காப்பீடு தொகை அதிகம் தேவைப்படும் போது இந்தப் போதாமையின் காரணமாக இடர் வரும். ஆகவே மருத்துவக் காப்பீட்டுக்கு செலுத்தும் ப்ரீமியதொகையினை மிச்சம் பிடிப்பதாக நினைத்துக் கொண்டு மருத்துவக் காப்பீடு செய்து கொள்ளாமல் இருப்பது நல்லதல்ல.

## கடன் நிவாரணங்கள்

கொரோனா தொற்று போன்ற பேரிடர் காலங்களில் அரசு கடன்களுக்கான வட்டி தவணை செலுத்துவதில் கால அவகாச நீட்டிப்பு செய்கிறது. இந்த வசதியினை அவசியம் ஏற்பட்டால் மட்டுமே பயன்படுத்த வேண்டும். இது போன்ற கால அவகாச நீட்டிப்பு தற்காலிக நிவாரணம் மட்டுமே. கடன் தள்ளுபடி செய்யப்படுவதில்லை. வட்டி ரத்து செய்யப்படுவதில்லை. ஆகவே இது போன்ற நிவாரணங்களை நாம் பயன்படுத்தும் போது மற்றுமொரு கடன் வாங்குவது போன்ற பொறுப்பினைச் சுமக்கிறோம். ஆகவே மிக அவசியம் ஏற்பட்டால் தவிர இந்த நிவாரணங்களை பயன்படுத்தக்கூடாது.

HDFC DEPOSITS

# Interest Rates on Deposits
# INDIVIDUALS

## HDFC Special Deposits

(Limited period scheme) (Fixed Rates only)

### Deposits upto ₹ 2 Crore

| Period | Monthly Income Plan | Quarterly Option | Half-Yearly Option | Annual Income Plan | Cumulative Option* |
|---|---|---|---|---|---|
| 33 Months | 6.35% | 6.40% | 6.45% | 6.56% | 6.56% |
| 66 Months | 6.45% | 6.50% | 6.55% | 6.66% | 6.66% |
| *Minimum Amount* (₹) | 40,000 | 20,000 | 20,000 | 20,000 | 20,000 |

## HDFC Premium DEPOSITS

(Fixed Rates only)

### Deposits upto ₹ 2 Crore

| Period | Monthly Income Plan | Quarterly Option | Half-Yearly Option | Annual Income Plan | Cumulative Option* |
|---|---|---|---|---|---|
| 15 Months | 6.20% | 6.25% | 6.30% | - | 6.41% |
| 22 Months | 6.30% | 6.35% | 6.40% | 6.51% | 6.51% |
| 30 Months | 6.25% | 6.30% | 6.35% | 6.46% | 6.46% |
| 44 Months | 6.40% | 6.45% | 6.50% | 6.61% | 6.61% |
| *Minimum Amount* (₹) | 40 000 | 20 000 | 20 000 | 20 000 | 20 000 |

Rates Effective From July 4, 2020

Additional interest rate of 0.25% for senior citizen ( 60 years and above)

## வருமான வரிக்கணக்கு படிவங்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி

கொரோனா நோய்த் தொற்று தீவிரமாகிப் பரவி வருவதால் வருமான வரிக் கணக்கு படிவங்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி தேதிகளை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

சம்பளம் பெறுவோர், ஓய்வூதியம் பெறுவோர், தொழில் புரிவோர் (ஆண்டு வியாபாரம் ஒரு கோடிக்கும் குறைவான வியாபாரம்) வருமான வரிக் கணக்குகளை 31 ஜூலை 2020 க்குள் தாக்கல் செய்ய வேண்டும் என இருந்த கெடுவை 30 நவம்பர் 2020 வரை தாக்கல் செய்யலாம் என அரசு நீட்டித்துள்ளது.

ஆண்டு வியாபாரம் 1 கோடிக்கு மேல் வியாபாரம் செய்வோர் வருமான வரி தாக்கல் செய்ய வேண்டிய கடைசி நாள் 31 அக்டோபர் 2020 என்பதை 30 நவம்பர் 2020 என அரசு நீட்டித்துள்ளது.

You can buy Gold in paper form.

## RBI's Sovereign Gold Bond

2020-21 Series 4

**6th to 10th July 2020**

2020-21 Series 5

**3rd to 7th August 2020**

2020-21 Series 6

**31st Aug to 4th Sep 2020**

- Earn Interest Half Yearly
- Tradability
- Safety - No Storage
- Demat/Physical
- Security - RBI's
- Purity
- 8 Year Tenure






*Do you know?* CD - Certificate of Deposit

## NOW TRACK YOUR INVESTMENT PORTFOLIO

# ANYTIME... ANYWHERE...

*"Smart window to the financial world for the smart people"*



### Your Investment Portfolio

Mutual Fund, Life/Health/Motor Insurance, Gold, Shares, Company and Postal Deposits.

### Online MF Transactions

Buy, Switch and Sell Mutual Fund Yourself.

### Send Service Request

Send us a Service Request for any assistance

### Event Calendar

Premium dues, Policy Maturity and other financial events tracker.

### My Documents

All your Personal documents available through Google Drive, secure and safe.

### Recommended Funds

View those top performing funds, that are recommended for investing now.

## வாடிக்கையாளர் குரல்



"பணி ஓய்வின் போது எனக்கு கிடைத்த தொகை முழுவதும் சிறந்த முதலீடுகளில் முதலீடு செய்ய உதவிய *CRK Financial Solutions*-ஐ நான் முழுமையாக நம்புகிறேன். எனது நீண்ட கால கடின உழைப்புக்கு கிடைத்த பலனை சிறந்த முறையிலும், முதலீடு பாதுகாப்பாகவும், பெருகிச் சிறக்கும் படியும் முதலீடு செய்து உதவிய ரவிக்குமாருக்கு மனமார்ந்த நன்றி. எனது நண்பர்களுக்கும் அவரது சேவை தேவை என்பதால் நான் மனப்பூர்வமாக பரிந்துரை செய்கிறேன்."

**- Mrs. Latha Raghuraman,**
Ex - Senior Manager, Ashok Leyland Ltd



"ஆதவன் இயற்கையிலே அனைவருக்கும் நன்மை புரிபவர். ரவி என்பது ஆதவனுக்கு ஒரு பெயர். அவரும் சூரியன் போலவே பிறர் நலனில் அக்கறை கொண்டவர். சூரியன் எப்படி ஒளியும் சக்தியும் தருகின்றதோ அது போல ரவியும் வாடிக்கையாளர்களை சரியான ஆலோசனை கொடுத்து வழிநடத்துகிறார். அவருடன் நான் நீண்ட காலத் தொடர்பு கொண்டு பயனடைகின்றேன் என்பதை மகிழ்சியுடன் பகிர்ந்து கொள்கின்றேன். அவர்களது சேவை மேலும் தொடர, அவருக்கும் அவரது பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்."

**- Dr. R.M. Srinivasan**
Deputy Director, Hindi Teaching Scheme (Retired)

## A NOTE TO OUR DEAR READERS

"Financial Insights" is an investor awareness publication by CRK Financial Solutions. It is being sent to some of you on a complimentary basis as part of our humble effort to ensure that more & more investors are made financially aware so that they get the best from their savings & investments. We sincerely hope that you like the contents of Financial Insights and in some way benefit from the same. Moreover, we would be happy to receive your feedback on the contents of this publication, we request you to please let us know by sending us an email on webmaster@chequeleaf.com. Alternatively, you can even write to us at our office address:

**CRK Financial Solutions, New No 75, Arya Gowda Road, West Mambalam, Chennai 600 033.**


| PUBLISHER | EDITOR | DESIGNER | PRINTER |
|---|---|---|---|
| **CRK Financial Solutions** | **Chandramowleeswaran V** | **Vignesh Krishnamoorthy** | **K.N. Madhavachari** |
| **+91 99416 06398** | **+91 98406 56627** | **+91 99529 78900** | **Annai Designs +91 63803 59197** |